**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**அசல் வழக்கு எண். 159/2023**

2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 06 ஆம் நாள் திங்கள் கிழமை **வா.சா.1** இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திருமதி. மகாலெட்சுமி, Gr.II Bench Clerk அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | குமார் | த/பெ.: | ராமதாஸ் |
| கிராமம்: | ஆரியலூர், கடுவெளி கிராமம் | தாலுக்கா: | திருத்துறைப்பூண்டி |
| மதம்: | இந்து | தொழில்: | விவசாயம் |
| வயது: | 35 | முகவரி: | ஆரியலூர், கடுவெளி கிராமம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 06.10.2025.

**முதல் விசாரணை :–**

நான் அசல் வழக்கில் வாதியின் அதிகார முகவர் ஆவேன். நான் எனது முதன்மை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். நான் சொல்லி தான் தயார் செய்யப்பட்டது. 11.09.1909–ல் இராமையா புரையர் ஏற்படுத்தி வைத்த தர்ம செட்டில்மெண்ட் பத்திரம் சார்பதிவக நகல் **வா.சா.ஆ.1** ஆகும். 18.09.1934–ல் இராமையா புரையர் எழுதி வைத்த உயில் பத்திரம் சார்பதிவக நகல் **வா.சா.ஆ.2** ஆகும். 08.06.2015–ல் திருத்துறைப்பூண்டி தலைமையிடத்து துணை வட்டாட்சியர் வழங்கிய சிட்டா கணினி நகல் **வா.சா.ஆ.3** ஆகும். 23.03.2015–ல் பிரதிவாதிகளுக்கு அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் **வா.சா.ஆ.4** ஆகும். 04.04.2015–ல் பிரதிவாதிகள் அனுப்பிய பதில்

அறிவிப்பு அசல் **வா.சா.ஆ.5** ஆகும். 02.12.2024–ல் வாதி ராமதாஸ் எழுதிக்கொடுத்த பொது அதிகாரப்பத்திரம் உண்மை நகல் **வா.சா.ஆ.6** ஆகும். தாவாப்படி தீர்ப்பாக பிரார்த்திக்கிறேன்.

**பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.